செ.வெ.எண்:33 நாள்:16.10.2021

**கோ.ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி 2021 சிறப்பு தள்ளுபடி விற்பனையை, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் இன்று (16.10.2021) குத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.**

**தீபாவளி 2021 பண்டிகைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 2 விற்பனை நிலையங்களுக்கு ரூ.3 கோடியே 5 இலட்சம் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**பொதுமக்கள் கைத்தறி ஆடைகளை வாங்கி நெசவாளர்களுக்கு உதவிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வேண்டுக்கோள்.**

கிருஷ்ணகிரி கோ-ஆப்ரடிவ் காலனி (ஸ்டேட் பேங்க் அருகில்) புதிய கட்டிடத்தில் இயங்கி வரும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி 2021 சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் இன்று (16.10.2021) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது:**

**கிருஷ்ணகிரி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் 43A கிழக்கு சந்திப்பு சாலை, கோ-ஆப்ரெட்டிவ் காலனி, எஸ்.பி.ஐ. வங்கி அருகில், கிருஷ்ணகிரி - 635 001, கைப்பேசி எண்:97502 - 60373 என்ற முகவரியில் புதுபொலிவுடன் இயங்கி வருகிறது.**

இந்தியாவின் மிகப்பெரிய கைத்தறி நிறுவனமாக விளங்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935 முதல் தொடங்கப்பட்டு 86 ஆண்டுகளாக தமிழக அரசு கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையிலும், தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்குவது பொருட்டும் விழா காலங்களில் 30 சதவிதம் வரை சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது.

இந்தாண்டு தீபாவளி 2021-ல் புதிய வடிவமைப்புகளில் அசல் ஜரிகையுடன் கூடிய காஞ்சிபுரம் பட்டு புடவைகள், ஆரணி பட்டுப் புடவைகள் புதிய வடிவமைப்புடன் கூடிய மென் பட்டு புடவைகள் ஏராளமாக குவிந்துள்ளன. மேலும், கோவை, மதுரை, பரமக்குடி, திருச்சி மற்றும் சேலம் பகுதிகளில் தயாராகும் அனைத்து இரக காட்டன் புடவைகள் புதிய வடிவமைப்பிலும் ஆர்கானிக் மற்றும் களம்காரி காட்டன் புடவைகள் குறைந்த விலையில் நேர்த்தியான வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஏற்றுமதி இரகங்களான ஏப்ரான், குலட் மெத்தைகள், கையுறைகள், டேபுள் மேட், ஸ்கிரின் துணிகள், தலையணை உறையுடன் கூடிய படுக்கை விரிப்புகள் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு கைத்தறி இரகங்களுக்கு 30 சதவிகிதம் சிறப்பு தள்ளுபடி வழங்குகிறது. மேலும் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை நிலையம் செயல்படும். அனைவரும் கைத்தறி துணிகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டும்.

**விற்பனை இலக்கு:**

தீபாவளி 2021 பண்டிகைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 2 விற்பனை நிலையங்களுக்கு ரூ.305.00 இலட்சங்கள் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட விற்பனை நிலையங்களின் இலக்கு பின்வருமாறு,

| வ.எண் | விற்பனை நிலையத்தின் பெயர் | தீபாவளி 2020 விற்பனை | தீபாவளி 2021 விற்பனை குறியீடு |
|---|---|---|---|
| 1 | கோ-ஆப்டெக்ஸ் கிருஷ்ணகிரி விற்பனை நிலையம் | 49.39 இலட்சம் | 145.00 இலட்சம் |
| 2 | கோ-ஆப்டெக்ஸ் ஒசூர் விற்பனை நிலையம் | 55.39 இலட்சம் | 160.00 இலட்சம் |
| **மொத்தம்** | | **104.78 இலட்சம்** | **305.00 இலட்சம்** |

**கனவு நனவு திட்டம்:**

கோ-ஆப்டெக்ஸ் கனவு நனவு திட்டம் மாதாந்திர தவணைத் திட்டத்தில் கூடுதல் பலன் உள்ளதால் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து கனவு நனவு திட்டத்தில் உறுப்பினராக இருந்து வருகின்றனர்.

**கடன் விற்பனை:**

தீபாவளி 2021 சிறப்பு தள்ளுபடியாக அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு வட்டியில்லா கடன் வசதியில் 30 சதவிகிதம் வரையிலான தள்ளுபடி வழங்குகிறது.

இந்நிகழ்ச்சியில், கோ-ஆப்டெக்ஸ் துணை மண்டல மேலாளர் திரு.பி.சுப்பிரமணியன், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திரு.எஸ்.முருகேசன், விற்பனை மேலாளர்கள் திருமதி.எல்.ரெஜினா, திரு.எம்.சிலம்பரசன், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**